செ.வெ. எண்: 340 நாள்: 13–06–2012

**பத்திரிக்கை செய்தி**

**டெங்கு காய்ச்சல் மற்றும் பன்றிக் காய்ச்சல் நோய்த் தடுப்பு ஆய்வுக் கூட்டம்**

தமிழகத்தில் பன்றிக் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் குறித்த தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் நோய் நிலவரம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் **13.06.2012** அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர், சுகாதாரத் துறை முதன்மைச் செயலர், சென்னை மாநகராட்சி ஆணையாளர், துணை ஆணையாளர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குனர், மருத்துவக் கல்வி இயக்குனர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனர், சென்னை மாநகராட்சி நல அலுவலர் மற்றும் மருத்துவத் துறை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**டெங்கு காய்ச்சல்**

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் டெங்கு காய்ச்சல் அதிகமாகக் காணப்பட்டது. அதற்கான தடுப்பு நடவடிக்கைள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

தமிழக அரசு, மாநிலம் முழுவதும் டெங்கு காய்ச்சல் நோயைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

- முதன்மை செயலர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அவர்களால் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் டெங்கு நோய் மற்றும் அதன் கட்டுப்பாடு பற்றிய தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு தமிழகம் முழுவதும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன,
- தமிழகம் முழுவதும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள சுகாதாரத் துறையின் மாவட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- அனைத்து சுகாதார மாவட்டங்களிலும் டெங்கு காய்ச்சலைப் பரப்பும் ஏடீஸ் கொசுக்களை அழிக்க கொசுப்புழு ஒழிப்பு மற்றும் கொசு ஒழிப்புப் பணிகள் மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக உள்ளாட்சி அமைப்புகள், சுகாதாரத் துறை, கல்வித் துறை, மகளிர் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், திருநெல்வேலி மற்றும் இதர மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, நோய்த் தடுப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.**2.5** கோடி ஒதுக்கி உத்தரவிட்டுள்ளார்கள்.

- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மூன்று முறை திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்று தீவிர ஆய்வு மேற்கொண்டு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு, நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி, மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களில் மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களால் மண்டல கருத்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.
- மருத்துவமனைக்கு வரும் காய்ச்சல் நோயாளிகளின் விபரம் 24 மணிநேரமும் சேகரிக்கப்பட்டு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மாநிலம் முழுவதும் அனைத்து பள்ளிகள், கல்லூரிகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு டெங்கு காய்ச்சல் குறித்த விபரங்களும், அதனைத் தடுக்க பொது மக்களின் பங்களிப்பு குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் இந்த ஆண்டு ஜனவரி முதல் 13.06.2012 வரை 2566 நபர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, 36 நபர்கள் மரணம் அடைந்துள்ளனர்.

**பன்றிக் காய்ச்சல்**

தமிழகத்தில் ஜனவரி முதல் 13.06.2012 வரை 204 நபர்கள் பன்றிக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளது ஆய்வகப் பரிசோதனையின் மூலமாக உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதில் ஏப்ரல் மாதத்தில் நான்கு நபர்களும், ஜீன் மாதத்தில் ஒரு நபரும் சிகிச்சை பெற காலதாமதம் ஏற்பட்டதாலும், வயது முதிர்வின் காரணமாகவும் மரணம் அடைந்துள்ளனர்.

பன்றிக் காய்ச்சல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கென தனியாக சிறப்பு வார்டுகள் தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனை , அனைத்து மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பன்றிக் காய்ச்சல் நோய் சிகிச்சைக்குத் தேவையான ஒசல்டாமாவிர் மருந்துகள் போதுமான அளவு கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

**24 மணி நேர கட்டுப்பாட்டு மையம் (தொலைபேசி எண்.044 – 24350496)**

தமிழக அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குனரகத்தில் டெங்கு மற்றும் பன்றிக் காய்ச்சல் நோய் குறித்து 24 மணி நேரமும் தகவல்கள் பெறும் வகையில் தகவல் மையம் ஏற்படுத்தப்பட்டு , நோய் குறித்த நிகழ்வுகள் தினந்தோறும் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துமனைகளிலிருந்து பெறப்பட்டு, தீவிர கண்காணிப்பு மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு டெங்கு மற்றும் பன்றிக் காய்ச்சல் பரவுதல் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**சென்னை மாநகரம்**

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் சென்னை மாநகராட்சியில் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மாநகரத்தில் டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டில் இருப்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டது.

மேலும் நோய்த் தடுப்பு பணிகளைத் தீவிரப்படுத்த கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. வீட்டிலோ, வீட்டைச் சுற்றி உள்ள இடங்களிலோ கிடக்கும் டயர்கள், உடைந்த குடங்கள், வாளிகள், தேங்காய் சிரட்டைகள், ஆட்டுக்கல், பிளாஸ்டிக் கப்புகள், போன்ற ஏடிஸ் கொசு வளரும் உபயோகமற்ற பொருட்களை உடனே அகற்ற வேண்டும்.
2. தண்ணீர் பிடித்து வைக்கும் குடங்கள், பாத்திரங்கள், டிரம்கள், சிமெண்ட் தொட்டிகள் முதலானவற்றை கொசு புகாவண்ணம் மூடி வைக்க வேண்டும். வாரம் ஒரு முறை பிளீச்சிங் பவுடர் தூவி பிரஷ் வைத்து தேய்த்து கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.
3. வீட்டிலோ, அலுவலகத்திலோ, கடையிலோ அல்லது பிற இடங்களிலோ ஏடிஸ் கொசுப் புழுக்கள் இருப்பது ஆய்வின்போது கண்டறியப்பட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.
4. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு வரும் காய்ச்சல் நோயாளிகள் குறித்த தகவல்களை மாநகராட்சிக்கு உடனே தெரிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படும் காய்ச்சல் நோயாளிகள் கொசு வலை பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.
5. தனியார் மற்றும் அரசு மருத்துவர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
6. குடியிருப்போர் நலச் சங்கங்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
7. பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள், சினிமா தியேட்டர்கள், பூங்காக்கள், திருமண கூடங்கள், பள்ளி மற்றும் கல்லூரி போன்ற இடங்களில் மேலும் தீவிரமாக கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு மேற்கொண்டு வரும் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக டெங்கு காய்ச்சல் மற்றும் பன்றிக் காய்ச்சல் தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது. பொது மக்கள் பீதியடைய வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.